Web-Site

சென்னை மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ந.க.எண்: 02/SMC/ஒபக/ 2022 நாள்: .04.2022

பொருள்:- ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை மாவட்டம் –பள்ளி மேலாண்மைக் குழு – 2021 –2022 ஆம் ஆண்டு – அனைத்து அரசு பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு மறு கட்டமைப்பு சார்ந்த வழிகாட்டுதல்களில் சேர்க்கை மற்றும் நீக்கம் – சார்ந்து.

பார்வை:- 1. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–6 அவர்களின் கடித ந.க.எண்.449/C7/SMC/SS/2021–2022, நாள்.16.03.2022

2. ந.க.எண்.449/C7/SMC/SS/2021–2022, நாள்.31.03.2022 மற்றும் 06.04.2022

* * * * * * *

மேற்காண் பார்வை(1)ல் காணும் மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் செயல்முறைகளில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களில் கீழ்கண்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென பார்வை (2)ல் காணும் கடிதத்தின் வாயிலாக அறிவுறுத்தப்படுகிறது.

<u>திருத்தம் – 1</u>

பிரிவு 4 – கல்வி ஆர்வலர் / அரசுசாரா அமைப்பினர் / ஓய்வு பெற்ற ஆசிரியர் / புரவலர் என்பதில் புரவலர் என்ற வார்த்தை நீக்கப்படுகிறது. புரவலர் சார்ந்த விளக்கம் 4 (III) நீக்கப்படுகிறது.

பிரிவு 4(iv) கீழ்க்காண்டவாறு மாற்றியமைக்கப்படுகிறது

கல்வி ஆர்வலர், அரசு சாரா அமைப்பினர், ஓய்வு பெற்ற ஆசிரியர், இவர்களில் ஒருவர் மட்டுமே பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினராக இருக்கலாம்

<u>திருத்தம் –2</u>

பிரிவு 4(I)ல் காணப்படும் பள்ளி அமைந்துள்ள அதே பகுதி குடியிருப்புகளில் வசிப்பவராகவும் இருக்க வேண்டும் என்கிற பகுதி நீக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு மாற்றம் செய்யப்படுகிறது.

கல்வி ஆர்வலர், அரசு சாரா அமைப்பினர், ஓய்வு பெற்ற ஆசிரியர் என்பவர் கற்றலை மேம்படுத்தும் இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தில் சிறப்பாக செயல்படுபவராகவும், மாணவர்களின் நலனில் அதிக அக்கறை கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

<u>சேர்க்கைகள்</u>

- நகர்ப்புறங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளில் வார்டு எல்லைக்குள் ஒன்றுக்கும் மேற்பட்ட பள்ளிகள் இருந்தால், அந்தப் பிரதிநிதி அவரின் வார்டு எல்லைக்குள் அமைந்துள்ள ஒன்றுக்கும் மேற்பட்ட பள்ளிகளின் பள்ளி மேலாண்மைக் குழுக்களில் இருக்க அனுமதிக்கப்படுவார்.
- பள்ளியில் மாணவர் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தால், பள்ளி மேலாண்மைக் குழுவில் பெற்றோர்களின் எண்ணிக்கையை சூழலுக்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

திருத்தம்

<u>பெற்றோர் உறுப்பினர்களின் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தில் மாற்றம்:</u>

தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் விகிதாச்சார பிரதிநிதித்துவம்

**(Proportional Representation) :**

பள்ளிகளில் இறுதிவகுப்பு – தொடக்கப்பள்ளிகளில் 5ம் வகுப்பு, நடுநிலைப்பள்ளிகளில் 8ம் வகுப்பு, உயர்நிலைப் பள்ளிகளில் 10ம் வகுப்பு மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 12ம் வகுப்பு பயிலும் மாணவர்களின் பெற்றோர்களை பள்ளி மேலாண்மைக் குழுவில் உறுப்பினராக தெரிவு செய்வதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் இத்தகைய பெற்றோர்கள் பள்ளி மேலாண்மைக் குழுவில் தெரிவு செய்யப்பட்டால் பள்ளி மேலாண்மைக் குழுவில் அதன் ஆயுட்காலமான இரண்டு ஆண்டுகள் அவர்கள் முழுமையாக பணியாற்ற இயலாது. இத்தகைய பெற்றோர்கள் பள்ளியின் வளர்ச்சிக்கு தங்களின் பங்களிப்பை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் என்ற நிலையை தவிர்த்து மற்ற நிலைகளில் அளிக்கலாம்.

பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 15 பெற்றோர் உறுப்பினர்களில் கீழ்க்கண்ட மாற்றங்களுடன் விகிதாச்சார பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்.

| வ. எண் | பள்ளி | மாணவர்கள் பயிலும் வகுப்பு அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டிய பெற்றோர்கள் | | சுய உதவிக் குழு பெற்றோர் உறுப்பினர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | வகுப்பு | உறுப்பினர் எண்ணிக்கை | | |
| 1 | அரசு தொடக்கப் பள்ளி | | | | |
| | 1 முதல் 5 வகுப்புகள் உள்ள பள்ளி | 14 | 14 | 1 | 15 |
| 2 | அரசு நடுநிலைப் பள்ளி | | | | |
| | 1 முதல் 8 வகுப்புகள் உள்ள பள்ளி | 1/5 | 8 | 1 | 15 |
| | | 6–7 | 6 | | |
| 3 | அரசு உயர்நிலைப் பள்ளி | | | | |
| | 1 முதல் 10 வகுப்புகள் உள்ள பள்ளி | 15 | 6 | 1 | 15 |
| | 6 முதல் 10 ம் வகுப்புகள் உள்ள பள்ளி | 6–8 | 4 | | |
| | | 9 | 4 | | |
| 4 | அரசு மேல்நிலைப் பள்ளி | | | | |
| | 1 முதல் 12 வகுப்புகள் உள்ள பள்ளி | 1–5 | 3 | 1 | 15 |
| | | 6–8 | 3 | | |
| | | 9–10 | 4 | | |
| | | 11 | 4 | | |
| | 6 முதல் 12ம் வகுப்புகள் உள்ள பள்ளி | 6–8 | 5 | 1 | 15 |
| | | 9–10 | 5 | | |
| | | 11 | 4 | | |

மேற்காண் வழிகாட்டுதல்களை பின்பற்றி பள்ளி மேலாண்மைக் குழு மறுக்கட்டமைப்பு நிகழ்வினை எவ்வித புகருக்கும் இடமளிக்கா வண்ணம் சிறப்பாக நடத்திட அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
சென்னை மாவட்டம்

பெறுநர்

1. கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு தொடர் நடவடிக்கைக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
2. முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வியியல் மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (கிழக்கு, மேற்கு, மத்திய, வடக்கு மற்றும் தெற்கு)
4. அனைத்து உதவிக் கல்வி அலுவலர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி
5. அனைத்து வட்டார கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
6. அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் (மண்டலம் வழியாக)
7. அனைத்து மண்டல மேற்பார்வையாளர்கள் (பொ) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள்